அனுமான் நதி மீது மேம்பாலம்.

174—(*வினா எண் 788)—திருமதி ரமணி நல்லதம்பி: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராதாபுரம் தொகுதி, வடக்கன்குளம் ரோட்டில் அனுமான் நதி மீது மேம்பாலம் கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது கட்டப்படும் ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: தலைவர் அவர்களே, (அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

திருமதி ரமணி நல்லதம்பி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அனுமான் நதியிலே ஐரிஷ் பாலம் இருக்கின்ற காரணத்தினால் மழைக் காலங்களிலே சுமார் 75 கிராமங்கள் போக்குவரத்தில் பாதிக்கப்படுகின்றன. எனவே, இது மீண்டும் பரிசீலிக்கப்பட்டு அதிலே ஒரு பாலம் அமைக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: பேரவைத் தலைவரவர்களே, இந்த அனுமான் நதியில், மழை பெய்தால் மட்டும் தான் ஏராளமான நீர் வருகிறது என்ற குறிப்பைக் கொடுத்திருக்கிறார்கள். இருந்தாலும்கூட, மழை பெய்கின்ற காலத்திலேகூட அதிகமான தண்ணீர் வரும்பொழுது போக்குவரத்து நின்று போகின்றது என்பது உண்மைதான். எனவே, எதிர்காலத்தில் இப்படிப்பட்ட பால வேலை அமைப்பதற்கு அரசு நடவடிக்கை மேற்கொள்ளும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருமதி ரமணி நல்லதம்பி. (குறுக்கீடு) வேண்டியதில்லை, சரி ஒருவேளை அனுமான் நதி என்பதனால் அனைவரும் தாவியே போய்விடலாம் என்று கருதியிருப்பார்கள். (சிரிப்பு)

நேசமணி போக்குவரத்துக் கழகத்தின் மூலம் பேருந்து வசதி.

175—(*வினா எண். 821) திரு. ரவி அருணன்: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம், கடையத்தில் இருந்து பொட்டல்புதூர் — பாப்பான்குளம்—இடைகால் — அரியநாயகிபுரம்—சேரன்மகாதேவி வழியாக நாகர்கோவில் செல்ல நேசமணி போக்குவரத்துக் கழகத்தின் மூலம் பேருந்து வசதி செய்துதர அரசு நடவடிக்கை எடுக்குமா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது ?